

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், சுருளகோடு கிராமம், பரளியாறு அரசு ரப்பர் கழகத்தில் கூலி தொழிலாளியாக பணியாற்றி வந்த ஜார்க்கண்ட் மாநிலம், பெத்தேகர் மாவட்டம், கணேஷ்பூர் கிராமத்தை சார்ந்த திரு. ராம்தேவ்சிங் அவர்களின் மகன் விமல்சிங் என்பவர் மீது ஒகி புயலின் போது மரம் விழுந்து தொடையில் எலும்பு முறிவு ஏற்பட்டு, மருத்துவமனை கொண்டு சென்றபோது மரணமடைந்தார். அவருடைய குடும்பத்திற்கு நிவாரண நிதியாக ரூ.10,00,000/-க்கான காசோலையினை, அவரது மனைவி திருமதி கவிதாதேவியிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், இன்று (26.12.2017) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மரு. பரிதாபானு, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புதிட்டம்) திரு. நா. முருகேசன் ஆகியோர் உடனுள்ளனர்.